# திருச்சிராப்பள்ளி மாநகராட்சி

**2018 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 23 ஆம் நாள், வெள்ளி கிழமை மாலை 4.00 மணியளவில் திருச்சிராப்பள்ளி மாநகராட்சி தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களது அறையில் பின்வரும் பொருள்களைப் பற்றிக் கூட்டம் நடைபெறும்.**

## நிகழ்ச்சி நிரல்

**பொருள். 1**

திருச்சிராப்பள்ளி மாவட்டம், திருச்சி (கி) வட்டம், கொட்டப்பட்டு கிராமம், பிளாக் எண் 2, வார்டு AW, நகரளவு எண் 3ல் அமைந்துள்ள 0.0775.0 ச.மீ. பரப்பளவு கொண்ட, கிராமக் கணக்கில், சர்க்கார் புறம்போக்கு என வகைப்பாடு செய்யப்பட்டு, **நகராட்சி ஆரம்பப் பள்ளிக்கூடம்** எனப் பதிவாகியுள்ள நிலத்தினை திருச்சிராப்பள்ளி விமான நிலைய விரிவாக்கத்திற்காக நில உரிமை மாற்றம் செய்ய ஏதுவாக, தனி அலுவலர் மன்றத் தீர்மானம் நிறைவேற்றி, அதன் நகலினை அனுப்பி வைக்குமாறு தனி வட்டாட்சியர் (நிலமெடுப்பு), திருச்சி அவர்களின் கடித எண் ந.க.அ1/03/2018, நாள் 26.10.2018ன் வாயிலாகக் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

மேற்படி கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நிலம், தேர்தல் வார்டு எண் 37ல் அமைகிறது. மேலும், மேற்படி இடம், கிராமக் கணக்கில் சர்க்கார் புறம்போக்கு என வகைப்பாடு செய்யப்பட்டு, நகராட்சி ஆரம்பப் பள்ளிக்கூடம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே, தனி வட்டாட்சியர் (நிலமெடுப்பு), திருச்சி அவர்களின் கோரிக்கையினை ஏற்று, நிலமெடுப்பு மேற்கொள்ளப்படவுள்ள மேற்படி நிலத்தினை நிலமாற்றம் செய்ய இசைவினை வழங்க, தனி அலுவலர் மன்றத்திற்குப் பொருள் வைக்கப்படுகின்றது.

**அலுவலகக் குறிப்பு :**

மேற்படி நிலமெடுப்பு மேற்கொள்ளப்படவுள்ள நிலத்தினை நிலமாற்றம் செய்ய இசைவினை வழங்கலாம்.

**(எப்1/6181/18/மையம்)**

**தீர்மானம் எண்.383 (பொருள்– 1) : அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள். 2**

தமிழகத்தில் உருவான "கஜா" புயல் காரணமாக திருவாரூர் மாவட்டம் அதிக அளவில் பாதிப்புக்குள்ளாகியுள்ளது. எனவே, திருவாரூர் மாவட்டத்தில் மீட்பு பணிகள் மேற்கொள்ள இம்மாநகராட்சியிலிருந்து துப்புரவு பணியாளர்களை அனுப்பி வைக்குமாறு தமிழக அரசிடமிருந்து உத்தரவு வரப்பெற்றுள்ளது.

அதனடிப்படையில் இம்மாநகராட்சியில் பணிபுரியும் துப்புரவுப் பணியாளர்களில் கோட்டத்திற்கு 50 பணியாளர்கள் வீதம் மொத்தம் 200 துப்புரவுப் பணியாளர்களையும், 8 துப்புரவுப் பணி மேற்பார்வையாளர்களையும் மீட்பு பணிகள் மேற்கொள்ள திருவாரூர் மாவட்டத்திற்கு அனுப்பி வைக்கப்பட உள்ளது.

மேற்கண்ட பணியாளர்களில் கோ. அபிஷேகபுரம் மற்றும் பொன்மலைக் கோட்ட துப்புரவுப் பணியாளர்களின் பணிகளை கண்காணிக்க திரு. கணேசன், சுகாதார ஆய்வாளரையும், அரியமங்கலம் மற்றும் ஸ்ரீரங்கம் கோட்ட துப்புரவுப் பணியாளர்களின் பணிகளை கண்காணிக்க திரு. பரசுராமன், சுகாதார ஆய்வாளரையும் அனுப்பி வைக்கலாம்.

மேற்கண்ட துப்புரவுப் பணியாளர்களை திருவாரூர் மாவட்டத்திற்கு அழைத்து சென்று வர ஆகும் செலவினங்கள் (உணவு, தேநீர் மற்றும் இதர செலவுகள் உட்பட) மேற்கொள்ள சுகாதார ஆய்வாளர்கள் திரு. கணேசன் மற்றும் திரு. பரசுராமன் ஆகிய இருவருக்கும் தலா ரூ.50,000/– வீதம் மொத்தம் ரூ. 1,00,000/– முன்பணமாக வழங்கலாம்.

அவசர அவசியம் கருதி இப்பணியினை திருச்சிராப்பள்ளி மாநகராட்சி சட்டம் 1994 பிரிவு 15ன் கீழ் மேற்கொள்ள தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

ஒப்புதல் வழங்கலாம்.

**(எப்1/10456/2018(மை)**

**தீர்மானம் எண்.384 (பொருள்– 2) : அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள். 3**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி பொன்மலை கோட்டம் ஆகிய பகுதிகளில் குடிநீர் விநியோகம் பதிக்கும் பணிகள் முடிக்கப்பட்டு, பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. மேற்படி பணிகளுக்கு இறுதி பட்டியல் வழங்கப்பட்டு, 3 ஆண்டுகள் கடந்து விட்டது. எனவே மேற்படி பணிகளுக்கு பட்டியலில் பிடித்தம் செய்யப்ட்டுள்ள பட்டியல் தொகை மற்றும் கூடுதல் வைப்புதொகை ஆகியவைகளை திரும்ப வழங்கும் படி திரு. A.G.இளமயிலன், ஒப்பந்ததாரர் கோரியுள்ளார்.

திரு. A.G.இளமயிலன், ஒப்பந்ததாரர் செலுத்திய பிணை வைப்புத் தொகை ரூ.235768/- இம்மாநகராட்சி நிலுவை வைப்புத் தொகை பதிவேடுகளில் கீழ்க்கண்டவாறு பதியப்பட்டுள்ளது.

மேற்படி ஒப்பந்ததாரர்களிடமிருந்து பிடித்தம் செய்துள்ள காப்புத்தொகை இம்மாநகராட்சி காலங் கடந்த வைப்புத் தொகை பதிவேட்டில் (Lapsed Deposit Account) கலம் எண் 7ல் கண்டுள்ளவாறு பதிவு செய்யப்பட்டுள்ளது.

| வ எண் | பணியின் விபரம் | ஒப்பந்ததாரர் பெயர் (திருவாளர்கள்) | செலுத்திய இடம் | பிடித்தம் செய்யப் பட்டுள்ள தொகை விபரம் | தொகை (ரூபாயில்) | காலங்கடந்த நிலுவை வைப்பத் தொகை (2018–19) பதிவேட்டின் பக்க எண் & வரிசை எண் |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 1 | பொன்மலைப்பட்டி தரைமட்ட நிர்த்தேக்கத் தொட்டியிலிருந்து தென்றல் நகர் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிக்கு செல்லும் பிரதான உந்துக்குழாயிலிருந்து சுப்ரமணிய நகர் தரை மட்ட நீர்த்தேக்கத் தொட்டிக்கு கிளை பிரதான உந்துக்குழாய் பதித்தல் இ7/9309/2012(மையம்) | திரு. A.G. இளமயிலன், ஒப்பந்ததாரர் திருச்சி | இறுதிப் பட்டியலில் பிடித்தம் செய்யப் பட்டுள்ளது | 19.04.13 காப்புத் தொகை | 84506.00 | பகுதி - V பக்கம் எண்- 36 வ.எண் - 04 (மையஅலுவலகம்) |
| | | | | 30.10.13 காப்புத் தொகை | 34305.00 | பகுதி - V பக்கம் எண்- 37 வ.எண் - 21 (மையஅலுவலகம்) |
| | | | | 02.06.14 காப்புத் தொகை | 114773.00 | பகுதி - V பக்கம் எண்- 45 வ.எண் - 31 (மையஅலுவலகம்) |
| | | | | 06.04.15 காப்புத் தொகை | 2184.00 | பகுதி - V பக்கம் எண்- 52 வ.எண் - 10 (மையஅலுவலகம்) |
| | **மொத்தம்** | | | | **235768.00** | |

மேலும், மேற்கண்ட பணியினை மேற்கொண்ட ஒப்பந்ததாரர்களுக்கு தணிக்கையில் “எவ்வித தணிக்கைத் தடையும் இல்லை'' எனச் சான்று அளிக்கப்பட்டுள்ளதால், கலம் எண் 6ல் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு பிடித்தம் செய்யப்பட்டு காலம் கடந்த வைப்புத் தொகை பதிவேடுகளில் பதிவு செய்யப்பட்டுள்ள தொகைகளை சம்பந்தப்பட்ட ஒப்பந்ததாரர்களுக்கு திரும்ப வழங்க தனிஅலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

மேற்கண்ட அட்டவணையில் கண்டுள்ள பணிக்கு பிடித்தம் செய்துள்ள காப்புத் தொகைகள் கடந்த 3 வருடங்களுக்கு முன் செலுத்தப்பட்டு காலங்கடந்த வைப்புத் தொகை கணக்கில் உள்ளதால், தற்பொழுது காலங்கடந்த வைப்புத் தொகை கணக்கிலிருந்து (Lapsed Deposit Account) அத்தொகையை ஒப்பந்ததாரர்களான திரு. AG. இளமயிலன் என்பவருக்கு ரூ.2,35,768/—யை, திரும்ப வழங்க ஒப்புதல் அளிக்கலாம்.

**இ7/9309/2012( மையம்)**

**தீர்மானம் எண்.385 (பொருள்— 3) : அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள். 4**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, அரியமங்கலம் கோட்டத்திற்குட்பட்ட பகுதியில் கீழ்கண்ட பணியினை திரு.கே. துரையன், திருச்சி அவர்களால் மேற்கொள்ளப்பட்டதற்கு இறுதிப்பட்டியல் வழங்கப்பட்டு விட்டது. இப்பணிக்கு பிடித்தம் செய்துள்ள வைப்புத் தொகை மற்றும் காப்புத் தொகையினை திரும்ப வழங்க கோரியுள்ளார். கீழ்கண்டுள்ள பணியினைமேற்கொண்டமைக்கு தணிக்கையில் எவ்வித தணிக்கைத் தடையும் எழுப்பப்படவில்லை.

மேற்படி ஒப்பந்ததாரர் செலுத்தியுள்ள வைப்புத் தொகை இம்மாநகராட்சி காலங்கடந்த வைப்புத் தொகை மற்றும் காப்புத் தொகை பதிவேடுகளில் கீழ்கண்டவாறு பதிவு செய்யப்பட்டுள்ளது.

| வ எண் | பணியின் விபரம் | ஒப்பந்ததாரர் பெயர் (திருவாளர்கள்) | பட்டியலில் பிடித்தம் செய்யப் பட்ட நாள் | பிடித்தம் செய்யப்பட்ட தொகை (ரூபாயில்) | காலங்கடந்த வைப்புத் தொகை பதிவேட்டில் பக்க எண் & வரிசை எண் | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | | |
| | | | | | தொகுப்பு | ப. எண் | வ . எண் |
| 1 | வார்டு எண் 22க்குட்பட்ட படையாச்சி தெருவில் சிமெண்ட் கான்கிரீட் சாலை அமைத்தல் **மதிப்பீடு ரூ.8.00 லட்சம்** இ3/4336/12 | கே.துரையன், திருச்சி | 17.05.12 | 8000.00 Ch.No. 3125101979 Dt.17.05.12 (Ari. zone) | - | - | - |
| | | | 05.11.12 | 23833.00 | V | 42 | 567 |
| **மொத்தம்** | | | | **31833.00** | | | |

எனவே, பட்டியலில் கண்டுள்ளவாறு இப்பணிகளுக்கு பட்டியலில் பிடித்தம் செய்துள்ள காப்புத் தொகை ரூ.**31,833**/—ஐ காலங்கடந்த வைப்புத் தொகை பதிவேட்டிலிருந்து ஒப்பந்ததாரர் திரு.கே.துரையன், திருச்சி அவர்களுக்கு திரும்ப வழங்க தனிஅலுவலர் அவர்களின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

மேற்கண்ட அட்டவணையில் கண்டுள்ள பணிகளுக்கு பிடித்தம் செய்துள்ள காப்புத் தொகை ரூ.**31,833**/—ஐ காலங்கடந்த வைப்புத் தொகை கணக்கிலிருந்து (Lapsed Deposit Account) திரும்ப வழங்கவும் ஒப்புதல் அளிக்கலாம்.

**இ3/7399/17(மையம்)**

**தீர்மானம் எண்.386 (பொருள்— 4) : அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

பொருள். 5

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, பொன்மலைக் கோட்டம், வார்டு எண்.43, **டி.வி.எஸ் டோல்கேட் திருப்பத்தில்** உள்ள பேருந்து நிறுத்தத்தில் பொதுமக்கள் மற்றும் கல்லூரி மாணவர்கள் பேருந்து நிழற்குடையின்றி பெரும் சிரமத்திற்குள்ளாகின்றனர்.

எனவே, பொதுமக்கள் அவ்விடத்தில் மிகுந்த வெப்பத்தினாலும் புழுதியினாலும் சிரமத்திற்குள்ளாவதால், கீழ்க்காணும் பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள நிழற்குடையினை குளிர்சாதன வசதியுடன் கூடிய நிழற்குடையாக அமைத்துப் பராமரிக்க EOI (Expression of Interest) அடிப்படையில், ஒப்படைக்கும் நாள் முதல் மூன்றாண்டுகளுக்கு அனுமதி வழங்கவும், அதனைத் தகுதியான நிறுவனத்தைத் தேர்வு செய்து ஒப்படைக்கவும், தனி அலுவலர் மன்றத்திற்குப் பொருள் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வார்டு எண் | கோட்டம் | சாலையின் பெயர் | நிழற்குடை அமைந்துள்ள இடம் |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| 1 | 43 | பொன்மலை | சென்னை தேசிய நெடுஞ்சாலை | டி.வி.எஸ் டோல்கேட் திருப்பம் |

**அலுவலகக் குறிப்பு**

1. தனி அலுவலர் மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.
2. உரிமம் கோரும் அழைப்பினை உரிய நாளிதழ்களில் வினம்பரம் செய்ய ஆகும் செலவீனத்தை 2018–19ம் ஆண்டின் வரவு செலவுத் திட்டத்தின் கீழ், மேற்கொள்ளலாம்.

**(எப்1/10011/18/மையம்)**

**தீர்மானம் எண்.387 (பொருள்– 5) : அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

பொருள். 6

இம்மாநகராட்சியில் பணிபுரியும் துப்புரவுப் பணியாளர்களில் கோட்டத்திற்கு 40 பணியாளர்கள் வீதம் மொத்தம் 160 துப்புரவுப் பணியாளர்களையும், 3 துப்புரவுப் பணி மேற்பார்வையாளர்களையும் மீட்பு பணிகள் மேற்கொள்ள 20.11.2018 அன்று திருவாரூர் மாவட்டத்திற்கு அனுப்பி வைக்க திட்டமிடப்பட்டது. இந்நிலையில், புதுக்கோட்டை மாவட்டமும் அதிக அளவில் புயல் பாதிப்பு ஏற்பட்டுள்ளதால் மேற்கண்ட 160 பணியாளர்களில் பொன்மலை கோட்ட துப்புரவுப் பணியாளர்கள் 50 நபர்களை முதற்கட்டமாக 20.11.2018ம் தேதி (இன்று), புதுக்கோட்டை மாவட்டத்திற்கு அனுப்பி வைக்கப்பட உள்ளது. மேலும், 21.11.2018ம் தேதியன்று 50 துப்புரவுப் பணியாளர்களையும் இரண்டாம் கட்டமாக புதுக்கோட்டை மாவட்டத்திற்கு அனுப்பி வைக்கப்பட உள்ளது. மேற்கண்ட பணியாளர்களை கண்காணிக்க திரு. மகாமனி, சுகாதார ஆய்வாளரை அனுப்பி வைக்கப்பட உள்ளது.

மேற்கண்ட துப்புரவுப் பணியாளர்களை புதுக்கோட்டை மாவட்டத்திற்கு அழைத்து சென்று வர ஆகும் செலவினங்கள் (உணவு, தேநீர் மற்றும் இதர செலவுகள் உட்பட) மேற்கொள்ள சுகாதார ஆய்வாளர் திரு. மகாமுனிக்கு ரூ.1,00,000/– முன்பணமாக வழங்க ஆணையர் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது.

அவசர அவசியம் கருதி இப்பணியினை திருச்சிராப்பள்ளி மாநகராட்சி சட்டம் 1994 பிரிவு 15ன் கீழ் மேற்கொள்ள தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

ஒப்புதல் வழங்கலாம்.
**எச்1/10456/18(மை)**

**தீர்மானம் எண்.388 (பொருள்– 6) : அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள். 7**

தற்பொழுது திருவாரூர், மன்னார்குடி, திருத்துறைபூண்டி ஆகிய நகராட்சிகளில், திரு. பரசுராமன் மற்றும் திரு. கணேசன் ஆகிய சுகாதார ஆய்வாளர்களை கண்காணிப்பு அலுவலராக கொண்டு ‘‘கஜா’’ புயல் மீட்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வரும் 165 துப்புரவுப் பணியாளர்கள் திருச்சிக்கு 20.11.2018 அன்று திரும்பி வர உள்ளனர் மேற்கண்ட பணிக்கான பயனச் செலவிற்காக தலா ரூ.20,000/– வீதம் மொத்தம் ரூ.40,000/– முன்பணமாக வழங்கலாம்.

மேலும், இம்மாநகராட்சியில் பணிபுரியும் துப்புரவுப் பணியாளர்களில் கோட்டத்திற்கு 40 பணியாளர்கள் வீதம் மொத்தம் 160 துப்புரவுப் பணியாளர்களையும், 3 துப்புரவுப் பணி மேற்பார்வையாளர்களையும் மீட்பு பணிகள் மேற்கொள்ள நாளை 20.11.2018 அன்று திருவாரூர் மாவட்டத்திற்கு அனுப்பி வைக்கப்பட உள்ளது.

மேற்கண்ட பணியாளர்களில் கோ. அபிஷேகபுரம் மற்றும் பொன்மலை கோட்ட துப்புரவுப் பணியாளர்களின் பணிகளை கண்காணிக்க திரு. தலைவிரிச்சான், சுகாதார அலுவலரையும், அரியமங்கலம் கோட்ட துப்புரவுப் பணியாளர்களின் பணிகளை கண்காணிக்க திரு. பிரின்ஸ் சகாயராஜ், சுகாதார ஆய்வாளரையும் மற்றும் ஸ்ரீரங்கம் கோட்ட துப்புரவுப் பணியாளர்களின் பணிகளை கண்காணிக்க திரு. பன்னீர்செல்வம், சுகாதார ஆய்வாளரையும் அனுப்பி வைக்கலாம்.

மேற்கண்ட துப்புரவுப் பணியாளர்களை திருவாரூர் மாவட்டத்திற்கு அழைத்து சென்று வர ஆகும் செலவினங்கள் (உணவு, தேநீர் மற்றும் இதர செலவுகள் உட்பட) மேற்கொள்ள சுகாதார அலுவலர் திரு. பொன். தலைவிரிச்சான் மற்றும் சுகாதார ஆய்வாளர்கள் திரு.பன்னீர் செல்வம் மற்றும் திரு. பிரின்ஸ் சகாயராஜ் ஆகிய மூவருக்கும் தலா ரூ.60,000/– வீதம் மொத்தம் ரூ.1,80,000/– முன்பணமாக வழங்கலாம்.

அவசர அவசியம் கருதி மொத்த செலவினம் ரூ.2,20,000/–தில் (ரூ.40,000/– + ரூ.1,80,000/–) இப்பணியினை திருச்சிராப்பள்ளி மாநகராட்சி சட்டம் 1994 பிரிவு 15ன் கீழ் மேற்கொள்ள தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>**

ஒப்புதல் வழங்கலாம்.

**எச்1/10456/18(மை)**

**தீர்மானம் எண்.389 (பொருள்– 7) : அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள். 8**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கீழ்க்காணும் ஒப்பந்ததாரரால் பணிகள் செய்து முடிக்கப்பெற்று, பட்டியல் தொகைகள் வழங்கப்பட்டு விட்டது.

மேற்கண்ட பணிக்கு பிடித்தம் செய்யப்பட்டுள்ள காப்பு தொகைகளை திரும்ப வழங்குமாறு ஒப்பந்ததாரர்கள் கோரியுள்ளார். இப்பணிகளுக்கு தணிக்கை தடை ஏதும் எழுப்பப்படவில்லை.

மேற்கண்ட ஒப்பந்தாரரிடம் பிடித்தம் செய்யப்பட்ட கீழ்க்கண்ட தொகைகள் இம்மாநகராட்சி காலங்கடந்த வைப்புத் தொகை பதிவேடுகளில் கீழ்க்கண்டவாறு பதியப்பட்டுள்ளது.

| வ எண் | பணியின் விபரம் | ஒப்பந்ததாரர் பெயர் | பட்டியலில் பிடித்தம் செய்யப்பட்ட நாள். | பிடித்தம் செய்யப்பட்ட தொகை (3%) (ரூபாயில்) | காலங்கடந்த வைப்புத் தொகை பதிவேட்டில் பக்க எண் & வரிசை எண் |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 1 | வார்டு எண்.41க்குட்பட்ட ஸ்டேட் பேங்க் ஆபீஸர்ஸ் காலனி மூன்றாவது தெரு, பிள்ளையார் கோவில் தெரு, முஸ்லிம் தெரு, மிஷன் கோயில் தெருக்களுக்கு தண்ணீர் வசதி செய்து கொடுத்தல் | திரு.எம். குமார்<br><br>ஒப்பந்தப்புள்ளி அறிக்கை எண். 31/2013–14 வ.எண்.9 நாள்.19.06.2013<br><br>மதிப்பீடு ரூ.8.50 இலட்சம் | 31.10.13 | 18319.00 | தொகுப்பு – 6<br>பக்கம் எண் – 74<br>வ.எண் – 925 |
| மொத்தம் | | | | 18319.00 | |

மேற்கண்ட ஒப்பந்தாரர்களது பட்டியலில் பிடித்தம் செய்யப்பட்ட வைப்புத் தொகை **ரூ.18,319/–** ஐ காலங்கடந்த வைப்புத் தொகையிலிருந்து திரும்ப வழங்குவதற்கு தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் அனுமதி கோரி மன்றப் பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:**

மேற்கண்ட அட்டவணையில் கண்டுள்ள பணிக்கு பட்டியலில் பிடித்தம் செய்யப்பட்ட தொகை **ரூ.18,319/–**ஐ காலங்கடந்த வைப்புத் தொகை கணக்கிலிருந்து (Lapsed Deposit Account) திரும்ப வழங்க ஒப்புதல் அளிக்கலாம்.

**இ4/4667/2013( மையம் )**

**தீர்மானம் எண்.390 (பொருள்– 8) : அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள். 9**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சியில் திடக்கழிவு மேலாண்மைப் பணியில் திடக்கழிவுகளை வீட்டு வாசலில் தரம் பிரித்து வாங்கும் பணிக்கு 2 க.மீ கொள்ளளவுள்ள இலகுரக டிப்பர் வாகனங்கள்-125 எண்ணிக்கை பயன்பாட்டில் உள்ளது. மேலும், கூடுதலாக தற்பொழுது புதிதாக 30 எண்ணிக்கை 2 க.மீ கொள்ளளவுள்ள இலகுரக டிப்பர் வாகனங்கள் வாங்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது. இவ்வாகனங்களில் பொதுமக்களிடமிருந்து மக்கும் குப்பை, மக்காத குப்பை என தரம் பிரிக்கப்பட்ட நிலையில் உள்ள திடக்கழிவுகளை நேரடியாக வாங்கி தனித்தனியாக சேகரிப்பதற்கு ஏதுவாக, பின்புற டிப்பர் பாடியில் இரண்டு பகுதிகளை உடையதாக ஆக்குவதற்கு உரிய கட்டுமான பணி மேற்கொள்ளப்பட வேண்டும்.

மேற்கண்ட விபரப்படியான பணியினை மேற்கொள்ள புதிதாக வாங்கப்பட்டுள்ள 30 எண்ணிக்கை 2 க.மீ கொள்ளளவுள்ள இலகுரக டிப்பர் வாகனங்களில் திறந்த நிலையில் உள்ள பின்புற டிப்பர் பாடியில் இரண்டு பகுதிகளாக பிரிப்பதற்கு ஏதுவாக மேற்புறம் மூடியுடன் கூடிய மூடப்பட்ட மேற்கூரை, உள்புறம் தாழ்பாளுடன் கூடிய கதவு மற்றும் உள்பகுதிகள் முழுவதும் S.S தகடுகள் பொருத்தி கூடுதல் கட்டுமானப் பணி செய்வதற்கு வாகனம் ஒன்றிற்கு உத்தேச செலவு ரூ.94,223/- ஆகும். மேலும் திடக்கழிவு மேலாண்மைப் பணியில் திடக்கழிவுகளை வீட்டு வாசலில் தரம் பிரித்து வாங்கும் பணி அவசியமாதலால் அவசர அவசியம் கருதி மேற்கண்ட பணியினை, மதிப்பீடு **ரூ.28.30** லட்சத்தில் ஒப்பந்தப்புள்ளி வரவழைத்து மேற்கொள்ள தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:**

1. மதிப்பீட்டுத்தொகை ரூ. 28.30/– லட்சத்திற்கு நிர்வாக அனுமதி அளிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை 2018–19ம் ஆண்டு மூலதன நிதி வரவு மற்றும் செலவினங்கள் கணக்கு தலைப்பு எண்: (2105/1) திடக்கழிவு மேலாண்மை பராமரிப்புப் பணிகள்- மனித ஆற்றல் உள்பட கணக்கு தலைப்பில் ஒதுக்கீடு செய்யபபட்டுள்ள தொகை ரூ.700.00 லட்சத்திலிருந்து நிதி ஒதுக்கீடு செய்து கொள்ள அனுமதி அளிக்கலாம்.

**இ5/10108/2018(மையம்)**

**தீர்மானம் எண்.391 (பொருள்– 9) : அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள். 10**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, அரியமங்கலம் கோட்டத்திற்குட்பட்ட பகுதியில் கீழ்கண்ட பணியினை திரு.எஸ்.பெரியசாமி, திருச்சி அவர்களால் மேற்கொள்ளப்பட்டதற்கு இறுதிப் பட்டியல் வழங்கப்பட்டு விட்டது. இப்பணிக்கு பிடித்தம் செய்துள்ள காப்புத் தொகையினை திரும்ப வழங்க

கோரியுள்ளார். கீழ்கண்டுள்ள பணியினை மேற்கொண்டமைக்கு தணிக்கையில் எவ்வித தணிக்கைத் தடையும் எழுப்பப் படவில்லை.

மேற்படி ஒப்பந்ததாரர் செலுத்தியுள்ள வைப்புத் தொகை இம்மாநகராட்சி காலங்கடந்த வைப்புத் தொகை மற்றும் காப்புத் தொகை பதிவேடுகளில் கீழ்கண்டவாறு பதிவு செய்யப்பட்டுள்ளது.

| வ எண் | பணியின் விபரம் | ஒப்பந்ததாரர் பெயர் (திருவாளர்கள்) | பட்டியலில் பிடித்தம் செய்யப் பட்ட நாள் | பிடித்தம் செய்யப்பட்ட தொகை (ரூபாயில்) | காலங்கடந்த வைப்புத் தொகை பதிவேட்டில் பக்க எண் & வரிசை எண் | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | | |
| | | | | | தொகுப்பு | ப. எண் | வ . எண் |
| 1 | அரியமங்கலம் கோட்டத்திற்குட்பட்ட பகுதிகளில் பேட்ச் ஒர்க் செய்யும் பணி **மதிப்பீடு ரூ.40.00 லட்சம்** இ3/11264/13 | திரு. எஸ். பெரியசாமி, திருச்சி | 20.10.14 4% | 37670.00 | VII | 31 | 422 |
| | | | 12.01.15 4% | 32325.00 | VII | 43 | 591 |
| | | | 04.05.15 4% | 79729.00 | - | - | – |
| | | | 02.06.15 4% | 10255.00 | - | - | – |
| | **மொத்தம்** | | | **159979.00** | | | |

எனவே, பட்டியலில் கண்டுள்ளவாறு இப்பணிகளுக்கு பட்டியலில் பிடித்தம் செய்துள்ள காப்புத் தொகை ரூ.**1,59,979/–**ஐ காலங்கடந்த வைப்புத் தொகை பதிவேட்டிலிருந்து ஒப்பந்ததாரர் திரு. எஸ்.பெரியசாமி, திருச்சி அவர்களுக்கு திரும்ப வழங்க தனிஅலுவலர் அவர்களின்அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

மேற்கண்ட அட்டவணையில் கண்டுள்ள பணிகளுக்கு பிடித்தம் செய்துள்ள காப்புத் தொகை ரூ.**1,59,979/–**ஐ காலங்கடந்த வைப்புத் தொகை கணக்கிலிருந்து (Lapsed Deposit Account) திரும்ப வழங்கவும் ஒப்புதல் அளிக்கலாம்.

**இ3/7518/17(மையம்)**

**தீர்மானம் எண். 392 (பொருள்– 10) : அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள். 11**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, அரியமங்கலம் மற்றும் கோ.அபிஷேகபுரம் கோட்டத்திற்குட்பட்ட பகுதியில் கீழ்கண்ட பணிகளை திரு.ஜி.ஆர்.இளங்குமரன், திருச்சி அவர்களால் மேற்கொள்ளப்பட்டதற்கு இறுதிப் பட்டியல் வழங்கப்பட்டு விட்டது. இப்பணிகளுக்கு பிடித்தம் செய்துள்ள காப்புத் தொகையினை திரும்ப வழங்க கோரியுள்ளார். கீழ்கண்டுள்ள பணிகளைமேற்கொண்டமைக்கு தணிக்கையில் எவ்வித தணிக்கைத் தடையும் எழுப்பப்படவில்லை.

மேற்படி ஒப்பந்ததாரரிடம் பிடித்தம் செய்துள்ள வைப்புத் தொகை இம்மாநகராட்சி காலங்கடந்த வைப்புத் தொகை மற்றும் காப்புத் தொகை பதிவேடுகளில் கீழ்கண்டவாறு பதிவு செய்யப்பட்டுள்ளது.

| வ எண் | பணியின் விபரம் | ஒப்பந்ததாரர் பெயர் (திருவாளர்கள்) | பட்டியலில் பிடித்தம் செய்யப் பட்ட நாள் | பிடித்தம் செய்யப்பட்ட தொகை (ரூபாயில்) | காலங்கடந்த வைப்புத் தொகை பதிவேட்டில் பக்க எண் & வரிசை எண் | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | | |
| | | | | | தொகுப்பு | ப. எண் | வ . எண் |
| 1 | வார்டு எண்26க்குட்பட்ட காஜாபேட்டை பிரதான சாலை கீழப்புதூர் சந்திப்பில் | திரு.ஜி.ஆர். இளங்குமரன். திருச்சி | 05.05.14 | 19924.00 | VII | 8 | 82 |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | பேருந்து நிழற்குடை புதியதாக அமைக்கும் பணி **மதிப்பீடு ரூ5.00 லட்சம்** இ3/11262/13 | | | | | | |
| 2 | வார்டு எண்60க்குட்பட்ட எழில்நகர் சர்ச் எதிர்புறம் சிமெண்ட் கான்கிரீட் சாலை அமைத்தல் **மதிப்பீடு ரூ3.00 லட்சம்** இ3/1521/13 | திரு.ஜி.ஆர். இளங்குமரன். திருச்சி | 27.03.13 | 9000.00 | VI | 3 | 10 |
| 3 | வார்டு எண்18க்குட்பட்ட ஜலால் குஜிலித் தெருவிலுள்ள மாநகராட்சி குப்பை கிடங்கில் மதில் சுவர் மற்றும் இரும்பிலான கதவு அமைத்தல் **மதிப்பீடு ரூ1.45 லட்சம்** இ3/10779/12 | திரு.ஜி.ஆர். இளங்குமரன். திருச்சி | 08.10.13 | 3371.00 | VI | 34 | 416 |
| 4 | வார்டு எண்21க்குட்பட்ட நித்தியானந்தபுரம் மேலத் தெரு மற்றும் மாதுளங் கொல்லை தெருவிற்கு சிமெண்ட் கான்கிரீட் சாலை அமைத்தல் **மதிப்பீடு ரூ10.00 லட்சம்** இ3/10045/12 | திரு.ஜி.ஆர். இளங்குமரன், திருச்சி | 10.09.13 | 29577.00 | VI | 29 | 349 |
| **மொத்தம்** | | | | **61872.00** | | | |

எனவே, பட்டியலில் கண்டுள்ளவாறு இப்பணிகளுக்கு பட்டியலில் பிடித்தம் செய்துள்ள காப்புத் தொகை ரூ.**61,872**/—ஐ காலங்கடந்த வைப்புத் தொகை பதிவேட்டிலிருந்து ஒப்பந்ததாரர் திரு.ஜி.ஆர். இளங்குமரன், திருச்சி அவர்களுக்கு திரும்ப வழங்க தனிஅலுவலர் அவர்களின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

மேற்கண்ட அட்டவணையில் கண்டுள்ள பணிகளுக்கு பிடித்தம் செய்துள்ள காப்புத் தொகை **ரூ.61,872/—**ஐ காலங்கடந்த வைப்புத் தொகை கணக்கிலிருந்து (Lapsed Deposit Account) திரும்ப வழங்கவும் ஒப்புதல் அளிக்கலாம்.

**இ3/10045/12(மையம்)**

**தீர்மானம் எண்.393 (பொருள்— 11) : அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள். 12**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி அரியமங்கலம் கோட்டம் பகுதிகளில் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகளுக்கு வர்ணம் பூசும் பணிகள் முடிக்கப்பட்டு, பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. மேற்படி பணிகளுக்கு இறுதி பட்டியல் வழங்கப்பட்டு, **3** ஆண்டுகள் கடந்து விட்டது. எனவே மேற்படி பணிகளுக்கு பட்டியலில் பிடித்தம் செய்யப்பட்டுள்ள பட்டியல் தொகை மற்றும் கூடுதல் வைப்புதொகை ஆகியவைகளை திரும்ப வழங்கும் படி திரு.சி. தனபால் திருச்சி ஒப்பந்ததாரர் கோரியுள்ளார்.

திரு.சி. தனபால் ஒப்பந்ததாரர் செலுத்திய பிணை வைப்புத் தொகை ரூ.12,807/- இம்மாநகராட்சி நிலுவை வைப்புத் தொகை பதிவேடுகளில் கீழ்க்கண்டவாறு பதியப்பட்டுள்ளது.

மேற்படி ஒப்பந்ததாரர்களிடமிருந்து பிடித்தம் செய்துள்ள காப்புத்தொகை இம்மாநகராட்சி காலங் கடந்த வைப்புத் தொகை பதிவேட்டில் (Lapsed Deposit Account) கலம் எண் 7ல் கண்டுள்ளவாறு பதிவு செய்யப்பட்டுள்ளது.

| வ எண் | பணியின் விபரம் | ஒப்பந்ததாரர் பெயர் (திருவாளர்கள்) | செலுத்திய இடம் | பிடித்தம் செய்யப் பட்டுள்ள தொகை விபரம் | தொகை (ரூபாயில்) | காலங்கடந்த நிலுவை வைப்பத் தொகை (2018–19) பதிவேட்டின் பக்க எண் & வரிசை எண் |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 1 | வார்டு எண்.14க்குட் பட்ட விறகுப்பேட்டை 15.00 கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேகக தொட்டிக்கு வர்ணம் பூசும் பணி மதிப்பீடு ரூ.4.30 இலட்சம் இ7/672/2014(மையம்) | திரு.சி. தனபால் | இறுதிப் பட்டியலில் பிடித்தம் செய்யப் பட்டுள்ளது | 20.03.14 காப்புத் தொகை | 12807.00 | பகுதி - V பக்கம் எண்- 39 வ.எண் - 40 (மையஅலுவலகம்) |
| | **மொத்தம்** | | | | **12807.00** | |

மேலும், மேற்கண்ட பணியினை மேற்கொண்ட ஒப்பந்ததாரர்களுக்கு தணிக்கையில் “எவ்வித தணிக்கைத் தடையும் இல்லை” எனச் சான்று அளிக்கப்பட்டுள்ளதால், கலம் எண் 6ல் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு பிடித்தம் செய்யப்பட்டு காலம் கடந்த வைப்புத் தொகை பதிவேடுகளில் பதிவு செய்யப்பட்டுள்ள தொகைகளை சம்பந்தப்பட்ட ஒப்பந்ததாரர்களுக்கு திரும்ப வழங்க தனிஅலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

மேற்கண்ட அட்டவணையில் கண்டுள்ள பணிக்கு பிடித்தம் செய்துள்ள காப்புத் தொகைகள் கடந்த 3 வருடங்களுக்கு முன் செலுத்தப்பட்டு காலங்கடந்த வைப்புத் தொகை கணக்கில் உள்ளதால், தற்பொழுது காலங்கடந்த வைப்புத் தொகை கணக்கிலிருந்து (Lapsed Deposit Account) அத்தொகையை ஒப்பந்ததாரர் திரு.சி. தனபால் ஒப்பந்ததாரர், திருச்சி நிறுவனத்திற்கு ரூ.12,807.00/–யை, திரும்ப வழங்க ஒப்புதல் அளிக்கலாம்.

**இ7/9837/2018( மையம் )**

**தீர்மானம் எண்.394 (பொருள்– 12) : அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள். 13**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி ஸ்ரீரங்கம் கோட்டம் பகுதிகளில் வைகுண்ட ஏகாதசி 2014 தொடர்பபக பணிகள் முடிக்கப்பட்டு, பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. மேற்படி பணிகளுக்கு இறுதி பட்டியல் வழங்கப்பட்டு, 3 ஆண்டுகள் கடந்து விட்டது. எனவே மேற்படி பணிகளுக்கு பட்டியலில் பிடித்தம் செய்யப்பட்டுள்ள பட்டியல் தொகை மற்றும் கூடுதல் வைப்புதொகை ஆகியவைகளை திரும்ப வழங்கும் படி திரு.SM. மாரியப்பன் ஒப்பந்ததாரர் கோரியுள்ளார்.

திரு.SM. மாரியப்பன் ஒப்பந்ததாரர் செலுத்திய பிணை வைப்புத் தொகை ரூ.29,180/- இம்மாநகராட்சி நிலுவை வைப்புத் தொகை பதிவேடுகளில் கீழ்க்கண்டவாறு பதியப்பட்டுள்ளது.

மேற்படி ஒப்பந்ததாரர்களிடமிருந்து பிடித்தம் செய்துள்ள காப்புத்தொகை இம்மாநகராட்சி காலங் கடந்த வைப்புத் தொகை பதிவேட்டில் (Lapsed Deposit Account) கலம் எண் 7ல் கண்டுள்ளவாறு பதிவு செய்யப்பட்டுள்ளது.

| வ எண் | பணியின் விபரம் | ஒப்பந்ததாரர் பெயர் (திருவாளர்கள்) | செலுத்திய இடம் | பிடித்தம் செய்யப்பட்டுள்ள தொகை விபரம் | தொகை (ரூபாயில்) | காலங்கடந்த நிலுவை வைப்புத் தொகை (2018–19) பதிவேட்டின் பக்க எண் & வரிசை எண் |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 1 | பிரிவு 1க்குட்பட்ட பகுதிகளில் பக்தர்களின் அடிப்படை வசதிகளுக்காக சிறுநீர் கழிப்பிடம் , கழிப்பிடம் போன்றவற்றிற்கு PVC Painted GI Sheet அமைத்தல், பிளாஸ்டிக் டிரம் அமைத்தல் ,மருத்துவ முகாம்கள் அமைத்தல், மற்றும் பேருந்து நிலையங்களில் சவுக்கினால் ஆன தடுப்பு அமைத்தல், வாகனம் நிறுத்தும் வசதிக்காக மின் விளக்குகள் அமைத்தல் போன்ற பணிகளை மேற்கொள்ளுதல் மதிப்பீடு ரூ.9.80 இலட்சம் இ7/7334/2017(மையம்) | திரு.S M. மாரியப்பன் | இறுதிப் பட்டியலில் பிடித்தம் செய்யப் பட்டுள்ளது | 05.03.14 காப்புத் தொகை | 29180.00 | பகுதி - VI பக்கம் எண்- 67 வ.எண் - 834 (மையஅலுவலகம்) |
| | **மொத்தம்** | | | | **29180.00** | |

மேலும், மேற்கண்ட பணியினை மேற்கொண்ட ஒப்பந்ததாரர்களுக்கு தணிக்கையில் “எவ்வித தணிக்கைத் தடையும் இல்லை’’ எனச் சான்று அளிக்கப்பட்டுள்ளதால், கலம் எண் 6ல் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு பிடித்தம் செய்யப்பட்டு காலம் கடந்த வைப்புத் தொகை பதிவேடுகளில் பதிவு செய்யப்பட்டுள்ள தொகைகளை சம்பந்தப்பட்ட ஒப்பந்ததாரர்களுக்கு திரும்ப வழங்க தனிஅலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

மேற்கண்ட அட்டவணையில் கண்டுள்ள பணிக்கு பிடித்தம் செய்துள்ள காப்புத் தொகைகள் கடந்த 3 வருடங்களுக்கு முன் செலுத்தப்பட்டு காலங்கடந்த வைப்புத் தொகை கணக்கில் உள்ளதால், தற்பொழுது காலங்கடந்த வைப்புத் தொகை கணக்கிலிருந்து (Lapsed Deposit Account) அத்தொகையை ஒப்பந்ததாரர் திரு.SM. மாரியப்பன் ஒப்பந்ததாரர், திருச்சி நிறுவனத்திற்கு ரூ.29,180/–யை, திரும்ப வழங்க ஒப்புதல் அளிக்கலாம்.

**இ7/7334/2017( மையம் )**

**தீர்மானம் எண்.395 (பொருள்– 13) : அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள். 14**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சியில் குடிநீர் அபிவிருத்தி திட்ட பணிகளில் அடங்கும் நீர்சேகரிப்பு கிணறு, தரைமட்ட தொட்டிகள், மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகள், பிரதான குழாய்கள், குடிநீர் விநியோக குழாய்கள் ஆகியவைகள் தொடர்பான நிலக்குறியீடு விளக்கும் மினியேச்சர் மாதிரியி பணிகள் முடிக்கப்பட்டு, பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. மேற்படி பணிகளுக்கு இறுதி பட்டியல் வழங்கப்பட்டு, 3 ஆண்டுகள் கடந்து விட்டது. எனவே மேற்படி பணிகளுக்கு பட்டியலில் பிடித்தம் செய்யப்பட்டுள்ள பட்டியல் தொகை மற்றும் கூடுதல் வைப்புதொகை ஆகியவைகளை திரும்ப வழங்கும் படி திரு, R.வெள்ளைச்சாமி திருச்சி ஒப்பந்ததாரர் கோரியுள்ளார்.

திரு, R.வெள்ளைச்சாமி ஒப்பந்ததாரர் செலுத்திய பிணை வைப்புத் தொகை ரூ.20,025/- இம்மாநகராட்சி நிலுவை வைப்புத் தொகை பதிவேடுகளில் கீழ்க்கண்டவாறு பதியப்பட்டுள்ளது.

மேற்படி ஒப்பந்ததாரர்களிடமிருந்து பிடித்தம் செய்துள்ள காப்புத்தொகை இம்மாநகராட்சி காலங் கடந்த வைப்புத் தொகை பதிவேட்டில் (Lapsed Deposit Account) கலம் எண் 7ல் கண்டுள்ளவாறு பதிவு செய்யப்பட்டுள்ளது.

| வ எண் | பணியின் விபரம் | ஒப்பந்ததாரர் பெயர் (திருவாளர்கள்) | செலுத்திய இடம் | பிடித்தம் செய்யப்பட்டுள்ள தொகை விபரம் | தொகை (ரூபாயில்) | நிலுவை வைப்புத் தொகை (2018–19) பதிவேட்டின் பக்க எண் & வரிசை எண் |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 1 | குடிநீர் அபிவிருத்தி திட்ட மாதிரியினை (Minature Model) விளக்கும் பணி மேற்கொள்ளுதல் மதிப்பீடு ரூ. **6.70** இலட்சம் இ7/ 10502/2013(மையம்) | திரு, R.வெள்ளைச் சாமி | இறுதிப் பட்டியலில் பிடித்தம் செய்யப் பட்டுள்ளது | 03.02.14 காப்புத் தொகை | 20025.00 | பகுதி - V<br>பக்கம் எண்- **39**<br>வ.எண் - 31<br>(மையஅலுவலகம்) |
| **மொத்தம்** | | | | | **20025.00** | |

மேலும், மேற்கண்ட பணியினை மேற்கொண்ட ஒப்பந்ததாரர்களுக்கு தணிக்கையில் “எவ்வித தணிக்கைத் தடையும் இல்லை'' எனச் சான்று அளிக்கப்பட்டுள்ளதால், கலம் எண் 6ல் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு பிடித்தம் செய்யப்பட்டு காலம் கடந்த வைப்புத் தொகை பதிவேடுகளில் பதிவு செய்யப்பட்டுள்ள தொகைகளை சம்பந்தப்பட்ட ஒப்பந்ததாரர்களுக்கு திரும்ப வழங்க தனிஅலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

மேற்கண்ட அட்டவணையில் கண்டுள்ள பணிக்கு பிடித்தம் செய்துள்ள காப்புத் தொகைகள் கடந்த 3 வருடங்களுக்கு முன் செலுத்தப்பட்டு காலங்கடந்த வைப்புத் தொகை கணக்கில் உள்ளதால், தற்பொழுது காலங்கடந்த வைப்புத் தொகை கணக்கிலிருந்து (Lapsed Deposit Account) அத்தொகையை ஒப்பந்ததாரர்களான திரு, R.வெள்ளைச்சாமி ஒப்பந்ததாரர், திருச்சி நிறுவனத்திற்கு ரூ.**20,025 /–**யை, திரும்ப வழங்க ஒப்புதல் அளிக்கலாம்.

**இ7/10502/2013( மையம் )**

**தீர்மானம் எண்.396 (பொருள்– 14) : அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள். 15**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சியில் ஸ்ரீரங்கம் கோட்டம் பகுதிகளில் மண் சாலையை அகற்றி விட்டு புதியதாக பேவர் பிளாக் அமைக்கும் பணிகள் முடிக்கப்பட்டு, பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. மேற்படி பணிகளுக்கு இறுதி பட்டியல் வழங்கப்பட்டு, **3** ஆண்டுகள் கடந்து விட்டது. எனவே மேற்படி பணிகளுக்கு பட்டியலில் பிடித்தம் செய்யப்பட்டுள்ள பட்டியல் தொகை மற்றும் கூடுதல் வைப்புதொகை ஆகியவைகளை திரும்ப வழங்கும் படி திரு. R. வெள்ளைச்சாமி திருச்சி ஒப்பந்ததாரர் கோரியுள்ளார்.

திரு. R. வெள்ளைச்சாமி ஒப்பந்ததாரர் செலுத்திய பிணை வைப்புத் தொகை ரூ.**29,398**/- இம்மாநகராட்சி நிலுவை வைப்புத் தொகை பதிவேடுகளில் கீழ்க்கண்டவாறு பதியப்பட்டுள்ளது.

மேற்படி ஒப்பந்ததாரர்களிடமிருந்து பிடித்தம் செய்துள்ள காப்புத்தொகை இம்மாநகராட்சி காலங் கடந்த வைப்புத் தொகை பதிவேட்டில் (Lapsed Deposit Account) கலம் எண் 7ல் கண்டுள்ளவாறு பதிவு செய்யப்பட்டுள்ளது.

| வ எண் | பணியின் விபரம் | ஒப்பந்ததாரர் பெயர் (திருவாளர்கள்) | செலுத்திய இடம் | பிடித்தம் செய்யப் பட்டுள்ள தொகை விபரம் | தொகை (ரூபாயில்) | காலங்கடந்த நிலுவை வைப்பத் தொகை (2018–19) பதிவேட்டின் பக்க எண் & வரிசை எண் |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 1 | ஸ்ரீரங்கம் கோட்டம் வார்டு எண்.3க்குட்பட்ட காந்தி ரோடு ராஜகோபுரம் முதல் ஸ்ரீரங்கம் கோட்ட அலுவலகம் வரை இருபுறமும் உள்ள மண்சாலையை அகற்றி விட்டு புதியதாக பேவர் பிளாக் அமைக்கும் பணி. மதிப்பீடு ரூ.9.95 இலட்சம் இ7/11293/2013(மையம்) | திரு, R. வெள்ளைச் சாமி | இறுதிப் பட்டியலில் பிடித்தம் செய்யப் பட்டுள்ளது | 11.04.14 காப்புத் தொகை | 29398.00 | பகுதி - VII பக்கம் எண்- 04 வ.எண் - 24 (மையஅலுவலகம்) |
| **மொத்தம்** | | | | | **29398.00** | |

மேலும், மேற்கண்ட பணியினை மேற்கொண்ட ஒப்பந்ததாரர்களுக்கு தணிக்கையில் “எவ்வித தணிக்கைத் தடையும் இல்லை'' எனச் சான்று அளிக்கப்பட்டுள்ளதால், கலம் எண் 6ல் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு பிடித்தம் செய்யப்பட்டு காலம் கடந்த வைப்புத் தொகை பதிவேடுகளில் பதிவு செய்யப்பட்டுள்ள தொகைகளை சம்பந்தப்பட்ட ஒப்பந்ததாரர்களுக்கு திரும்ப வழங்க தனிஅலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

மேற்கண்ட அட்டவணையில் கண்டுள்ள பணிக்கு பிடித்தம் செய்துள்ள காப்புத் தொகைகள் கடந்த 3 வருடங்களுக்கு முன் செலுத்தப்பட்டு காலங்கடந்த வைப்புத் தொகை கணக்கில் உள்ளதால், தற்பொழுது காலங்கடந்த வைப்புத் தொகை கணக்கிலிருந்து (Lapsed Deposit Account) அத்தொகையை ஒப்பந்ததாரர்களான திரு, R. வெள்ளைச்சாமி ஒப்பந்ததாரர், திருச்சி நிறுவனத்திற்கு ரூ.29,398 /–யை, திரும்ப வழங்க ஒப்புதல் அளிக்கலாம்.

**இ7/11293/2013( மையம் )**

**தீர்மானம் எண்.397 (பொருள்– 15) : அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள். 16**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி கட்டுப்பாட்டில் இயங்கி வரும் தலைமை நீர்ப்பணி நிலையங்களிலிருந்து, பொன்மலை கோட்டத்திற்குட்பட்ட பகுதிகளில் உள்ள மேல்நிலை நீர்தேக்க தொட்டிகளுக்கு குடிநீர் உந்தப்படும் விபரங்களை கண்காணிக்க பொருத்தப்பட்டுள்ள SCADA Unit–களை 01.11.2017 முதல் 31.10.2018 வரையிலான (ஓராண்டிற்கு) இயக்கி பராமரிப்பு செய்திட மதிப்பீடு ரூ.11.35 இலட்சத்திற்கு தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் நிர்வாக அனுமதி எண்.306, நாள்.28.09.2017ல் அனுமதி வழங்கப்பட்டதன் அடிப்படையில், ஒப்பந்தப்புள்ளிகள் 05.10.2017ல் பெறப்பட்டு மெசர்ஸ். ஏ.எஸ். பவர் சொல்யூஷன்ஸ், திருச்சி வழங்கிய குறைவான விலைப்புள்ளியினை ஏற்று, ஆணையர் அவர்களின் அனுமதி எண்.37, நாள்.01.11.2017ல் ஒப்புதல் அளிக்கப்பட்டதன் அடிப்படையில் 01.11.2017 முதல் மேற்கண்ட நிறுவனம் பொன்மலைக் கோட்டத்திற்குட்பட்ட பகுதிகளில் உள்ள மேல்நிலை நீர்தேக்க தொட்டிகளுக்கு குடிநீர் உந்தப்படும் விபரங்களை கண்காணிக்க பொருத்தப்பட்டுள்ள SCADA Unit–களை சீராக நல்ல முறையில் இயக்கி பராமரித்து வருகின்றது.

இவ்வாறான நிலையில் மேற்கூறப்பட்டுள்ள SCADA Unit–களை இயக்கி பராமரிக்கும் பணி வரும் 31.10.2018 அன்றுடன் ஓராண்டு நிறைவடைய உள்ளதால், ஏற்கனவே தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் நிர்வாக அனுமதி எண்.306, நாள்.28.09.2017ல் அனுமதிக்கப்பட்டுள்ள அலுவலக குறிப்பு வ.எண்.3ல், தேர்வு செய்யப்படும் நிறுவனம் நல்ல முறையில் பராமரிக்கும் பட்சத்தில் மேலும் கூடுதலாக 2 ஆண்டுகளுக்கு இயக்கி பராமரிப்பதற்கு ஒப்பந்ததாரருக்கு ஒவ்வொரு வருடமும், ஒப்பந்த தொகையில் 10 சதவீதம் உயர்த்தி (முதல் வருடம் நீங்கலாக) வழங்கும் தொகைக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இதன்படி, மெசர்ஸ். ஏ.எஸ்.பவர் சொல்யூஷன்ஸ், திருச்சி நிறுவனம் SCADA Unit–களை கடந்த ஓராண்டாக நல்ல முறையில் இயக்கி பராமரித்து வருவதால், மேலும் ஓர் ஆண்டிற்கு இயக்கி பராமரிக்க, கால நீட்டிப்பு ஆணை வழங்கிடவும், ஏற்கனவே வழங்கி வரும் மாதாந்திர ஒப்பந்த தொகை ரூ.94,310/–க்கு 10 சதவீதம் தொகை ரூ.9,431/–ஐ உயர்த்தி (01.11.2018 முதல் 31.10.2019 வரை ஓர் ஆண்டிற்கு) மாதம் ரூ.1,03,741/– வீதம் 12 மாதங்களுக்கு ஏற்படும் செலவினம் ரூ.12,44,892/–ஐ வழங்கிட ஏதுவாக, தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் நிர்வாக அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. மேற்கண்ட பணிக்கு மெசர்ஸ். ஏ.எஸ். பவர் சொல்யூஷன்ஸ், திருச்சி நிறுவனத்திற்கு மேலும் 01.11.2018 முதல் 31.10.2019 வரை ஒரு ஆண்டிற்கு கால நீட்டிப்பு செய்து பணி உத்தரவு வழங்க அனுமதிக்கலாம்.
2. இப்பணிக்கு ஆகும் உத்தேக செலவினத் தொகை ரூ.12,44,892/–க்கு நிர்வாக அனுமதி வழங்கலாம்.
3. மேற்கண்ட பணிக்கான செலவினத் தொகையினை 2018–19ம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் குடிநீர் விநியோக பராமரிப்பு பணிகள் கணக்கு தலைப்பு எண்.2125ன் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள ரூ.450.00 இலட்சத்தில் இருந்து ஒதுக்கீடு செய்து கொள்ளலாம்.

**இ7/6843/2017/(மையம்)**

**தீர்மானம் எண்.398 (பொருள்– 16) : அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள். 17**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி பொன்மலைக் கோட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட கீழ்க்கண்ட பணிகள் ஒப்பந்ததாரர் மெசர்ஸ்.S.S. கண்ஸ்ட்ரகசன்ஸ், திருச்சி நிறுவனத்தாரால் செய்து முடிக்கப்பெற்று, பட்டியல் தொகைகள் வழங்கப்பட்டு விட்டது.

மேற்கண்ட பணிகளுக்கு பிடித்தம் செய்யப்பட்டுள்ள காப்பு தொகை மற்றும் வைப்பு தொகைகளை திரும்ப வழங்குமாறு ஒப்பந்ததாரர் கோரியுள்ளார். இப்பணிக்கு தணிக்கை தடை ஏதும் எழுப்பப்படவில்லை.

மேற்கண்ட ஒப்பந்தாரரிடம் பிடித்தம் செய்யப்பட்ட கீழ்க்கண்ட தொகைகள் இம்மாநகராட்சி காலங்கடந்த வைப்புத் தொகை பதிவேடுகளில் கீழ்க்கண்டவாறு பதியப்பட்டுள்ளது.

| வ எண் | பணியின் விபரம் | ஒப்பந்ததாரர் பெயர் | பட்டியலில் பிடித்தம் செய்யப்பட்ட நாள். | பிடித்தம் செய்யப் பட்ட தொகை (4%) (ரூபாயில்) | வழங்கப் பட வேண்டிய தொகை (ரூபாயில்) | காலங்கடந்த வைப்புத் தொகை பதிவேட்டில் பக்க எண் & வரிசை எண் |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | | 8 |
| 1 | வார்டு எண்.31, 38 பொன்னேரி நகர், ஐஸ்வர்யா நகர் ஆகிய பகுதிகளில் கட்டப்பட்டுள்ள மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி | மெசர்ஸ். S.S. கண்ஸ்ட்ரகசன்ஸ், ஒப்பந்தப்புள்ளி அறிக்கை எண்.04/2013–14 வ.எண்.8 | EMD.Rs.4950/- DD. 533733, Indian bank Trichy Date.21.05.13 | – | 4950.00 | தொகுப்பு – VI பக்கம் எண் – 71 வ.எண் – 888 |
| | | | 24.10.2013 காப்புத் தொகை | 11334.00 | 11334.00 | தொகுப்பு – V பக்கம் எண் – 37 வ.எண் – 18 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | வளாகத்தில் SCADA அறை கட்டும் பணி | நாள்.**26.04.2013**<br><br>மதிப்பீடு ரூ.**4.95**இலட்சம் இ**7/4288/13**/மை | 24.03.2014<br>காப்புத் தொகை | **3301.00** | **3301.00** | தொகுப்பு – V<br>பக்கம் எண் – **43**<br>வ.எண் – **09** |
| 2 | வார்டு எண்.**38** சுப்ரமணிய நகர், வி,என்,தெரு, தென்றல் நகர் ஆகிய பகுதிகளில் கட்டப்பட்டுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி வளாகத்தில் ஸ்கடா அறை கட்டும் பணி | மெசர்ஸ். S.S. கண்ஸ்ட்ரகசன்ஸ்,<br><br>ஒப்பந்தப்புள்ளி அறிக்கை எண்.**04/2013–14** வ.எண்.**12** நாள்.**26.04.2013**<br><br>மதிப்பீடு ரூ.**3.30**இலட்சம் இ**7/4283/13**/மை | EMD.Rs.3300/- DD. 533734, Indian bank Trichy Date.21.05.13 | | **3300.00** | தொகுப்பு – VI<br>பக்கம் எண் – **71**<br>வ.எண் – **889** |
| | | | 24.10.2013<br>காப்புத் தொகை | **7552.00** | **7552.00** | தொகுப்பு – V<br>பக்கம் எண் – **37**<br>வ.எண் – **17** |
| | | | 24.03.2014<br>காப்புத் தொகை | **2204.00** | **2204.00** | தொகுப்பு – V<br>பக்கம் எண் – **43**<br>வ.எண் –**07** |
| **மொத்தம்** | | | | **24391.00** | **24391.00** | |

மேற்கண்ட ஒப்பந்தாரர்களது பட்டியலில் பிடித்தம் செய்யப்பட்ட வைப்புத் தொகை **ரூ.24,391/– &** ரூ.8,250/–ஐ காலங்கடந்த வைப்புத் தொகையிலிருந்து திரும்ப வழங்குவதற்கு தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் அனுமதி கோரி மன்றப் பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

மேற்கண்ட அட்டவணையில் கண்டுள்ள பணிக்கு பட்டியலில் பிடித்தம் செய்யப்பட்ட தொகை **ரூ.24,391/– &** ரூ.8,250/–ஐ காலங்கடந்த வைப்புத் தொகை கணக்கிலிருந்து (Lapsed Deposit Account) திரும்ப வழங்க ஒப்புதல் அளிக்கலாம்.

**இ7/6090/2017( மையம் )**

**தீர்மானம் எண்.399 (பொருள்– 17) : அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள். 18**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, கோ.அபிஷேகபுரம் கோட்டம், வார்டு எண்.**40**க்குட்பட்ட பிராட்டியூர் மாரியம்மன் கோவில் தெரு, நடுத்தெரு மற்றும் வடக்குத்தெரு ஆகிய தெருக்களுக்கு சிமெண்ட் கான்கிரீட் தளம் அமைக்கும் பணி மதிப்பீடு தொகை ரூ.**50.00** இலட்சம் பொதுநிதியின் கீழ் பணி நடைபெற்று வருகிறது. மேலும், மீதமுள்ள மேலத்தெரு மற்றும் கீழத்தெரு ஆகிய பகுதிகளுக்கு சிமெண்ட் கான்கிரீட் தளம் அமைக்கும்படி தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களால் அறிவுறுத்தப்பட்டது.

எனவே, மேற்கண்ட வார்டு எண்.**40**க்குட்பட்ட மேலத்தெரு மற்றும் கீழத்தெரு ஆகிய பகுதிகளுக்கு கான்கிரீட் தளம் அமைக்கும் பணி மேற்கொள்ள ரூ.**30.00** இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்து நிர்வாக அனுமதி கோரி தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் பார்வைக்கும், அனுமதிக்கும் பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு.**

1. மதிப்பீட்டுத் தொகை ரூ.**30.00** இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி அளிக்கலாம்.
2. **2018-19ம்** ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தில் **சிமெண்ட் கான்கிரீட் சாலை அமைத்தல் \ பழைய சிமெண்ட் கான்கிரீட் தளத்தை மேம்படுத்துதல் மற்றும் இதரப்பணிகள் (3113)** என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பட்டுள்ள நிதி ரூ.**100.00** இலட்சத்தின் கீழ் இப்பணிக்கான செலவினத்தை மேற்கொள்ள அனுமதி அளிக்கலாம்.

**இ2/9285/2018(மையம்)**

**தீர்மானம் எண்.400 (பொருள்– 18) : அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள். 19**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் AH1N1 பன்றிக் காய்ச்சல் நோய் தடுப்பு நடவடிக்கைகள் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இப்பணிகளின் முக்கிய பகுதியாக, இந்நோய் தாக்கம் ஏற்படுத்தும் பகுதிகளில் தூய்மை படுத்தும் பணியினை

மேற்கொள்ளவும், இம்மாநகராட்சிக்கு சொந்தமான நகர்புற ஆரம்ப சுகாதார நிலையக் கட்டிடங்கள், கோட்ட அலுவலகங்கள், சேவை மையங்கள், சமுதாயக் கூடங்கள், அம்மா உணவகங்கள், மற்றும் AH1N1 பன்றிக் காய்ச்சல் நோய் தடுப்பு நடவடிக்கைகாக 65 வார்டுகளுக்கும் உருவாக்கப் பட்டுள்ள குழுவின் மூலம் லைசால் 5% மற்றும் சர்ஜிகல் ஸ்பிரிட் எனும் கிருமி நாசினியினைக் கொண்டு தூய்மைப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. மேற்கண்ட கிருமி நாசினி மருந்துகளை தெளிக்க தேவையான 1 லிட்டர் கொள்ளளவு கொண்ட Hand Sprayer, 500 மில்லி லிட்டர் கொள்ளளவு கொண்ட Hand Sprayer, 4 லிட்டர் கொள்ளளவு கொண்ட Portable Sprayer, 500 மில்லி லிட்டர் கொள்ளளவு கொண்ட Hand Washerகள் வாங்கி வழங்க வேண்டியுள்ளது.

நோய் தடுப்பு நடவடிக்கையின் அவசர அவசியம் கருதி மேற்கண்ட பொருட்களை வாங்கி வழங்க வேண்டி இது தொடர்பான உள்ளூர் நிறுவனங்களிடமிருந்து மூடி முத்திரையிடப்பட்ட விலைப்புள்ளிகள் பெறப்பட்டு கீழ்க்கண்டவாறு ஒப்புநோக்கு செய்யப்பட்டுள்ளது.

| வ எண் | பொருள் விவரம் | எண்ணிக்கை | விலைப்புள்ளி அளித்த நிறுவனங்கள் | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | M/s Thirumalai Traders, FF3, Renga Complex, Near Ramba Theatre, Trichy. (Inclusive of all taxes and GST) | | M/s Sri Akshaya Traders, 4/10 East Sarayapattarai Street, Woraiyur, Trichy. (Inclusive of all taxes and GST) | | M/s Sri Amman Agencies, 1/3856/1, Gokulam Colony, Bishandar Kovil, No1, Tolgate, Trichy. (Inclusive of all taxes and GST) | |
| | | | Rs | Rs | Rs | Rs | Rs | Rs |
| 1. | 1 லிட்டர் கொள்ளளவு கொண்ட Hand Sprayer | 36 | 72.00 | 2592.00 | 66.00 | 2376.00 | 69.00 | 2484.00 |
| 2. | 500 மில்லி லிட்டர் கொள்ளளவு கொண்ட Hand Sprayer | 36 | 63.00 | 2268.00 | 51.00 | 1836.00 | 57.00 | 2052.00 |
| 3. | 4லிட்டர் கொள்ளளவு கொண்ட Portable Sprayer | 65 | 742.00 | 48230.00 | 730.00 | 47450.00 | 738.00 | 47970.00 |
| 4. | 500 மில்லி லிட்டர் கொள்ளளவு கொண்ட Hand Washer | 18 | 79.00 | 1422.00 | 75.00 | 1350.00 | 81.00 | 1458.00 |
| மொத்தம் | | | | 54512.00 | | 53012.00 | | 53964.00 |

முன்பக்க அட்டவணைப்படி குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள **M/s Sri Akshaya Traders, 4/10 East Sarayapattarai Street, Woraiyur, Trichy** என்ற நிறுவனத்தின் குறைந்த விலைப்புள்ளி தொகையினை ஏற்று மொத்த செலவீனம் ரூ.53,012/–ல், திருச்சிராப்பள்ளி மாநகராட்சி சட்டம் 1994 பிரிவு 15ன் கீழ் பொருட்களை கொள்முதல் செய்து கொண்டதை தனி அலுவலர் அவர்களின் பார்வைக்கும் பதிவிற்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>**

பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**எச்2/10404/2018(மையம்)**

**தீர்மானம் எண்.401 (பொருள்–19) : பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.**

**பொருள். 20**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, ஸ்ரீரங்கம் அருள்மிகு அரங்கநாத சுவாமி திருக்கோவிலின் முக்கிய பெருந்திருவிழாவான வைகுண்ட ஏகாதசி திருவிழா 07.12.2018 முதல் 28.12.2018 முடிய 22 நாட்கள் நடைபெற உள்ளது. இவ்விழாவிற்கு வெளியூர்களிலிருந்து யாத்ரீகர்கள் திரளாக வருகை புரிவதை முன்னிட்டு, ஸ்ரீரங்கம் பகுதி முழுவதும் பொது சுகாதார பணிகளை சிறப்பான முறையில் மேற்கொள்ள கீழ்க்காணும் பட்டியலில் உள்ள இனங்களுக்கான மொத்த உத்தேச செலவினம் ரூ.35,37,230/–க்கு தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் நிர்வாக அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

| வ. எண். | இனங்கள் | உத்தேச செலவின விபரம் ரூ. |
|---|---|---|
| 1 | 200 தற்காலிக துப்புரவுப் பணியாளர்கள் (200 நபர்கள் x 22 நாட்கள் x ரூ.360/-) | 15,84,000.00 |
| 2 | பிளிச்சீங் பவுடர் (3000 கிலோ) (3000Xரூ50.41) | 1,51,230.00 |
| 3 | நீர்த்த சுண்ணாம்பு (1 கிலோ- ரூ6.25X25,000 கிலோ) | 1,57,000.00 |
| 4 | பொது சுகாதார தளவாட பொருட்கள் | 3,65,000.00 |
| 5 | கருப்பு பினாயில் 1000 லிட்டர் | 90,000.00 |
| 6 | தற்காலிக கழிப்பிடம் மற்றும் மருத்துவ முகாம்களுக்கான கொட்டகை போன்ற அடிப்படை வசதிகள் வாடகை அடிப்படையில் ஏற்படுத்துதல். | 11,90,000.00 |
| **மொத்தம்** | | **35,37,230.00** |

**அலுவலக குறிப்பு**

1. 2018–2019ம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் கணக்கு தலைப்பு எண் 2103ல் திருத்திய மதிப்பீட்டில் இப்பணியினை மேற்கொள்ள அனுமதிக்கலாம்.
2. உத்தேச செலவீனம் ரூ.36,00,000/–க்கு நிர்வாக அனுமதி வழங்கலாம். இச்செலவீனத்தில் 50% தொகையினை கோவில் நிர்வாகத்திடமிருந்து அரசு உத்தரவின்படி பெற்று மாநகராட்சி கணக்கிற்கு கொண்டு வர நடவடிக்கை மேற்கொள்ளலாம்.
3. அவசர அவசியம் கருதி இப்பணியினை தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேற்கொள்ள ஒப்புதல் வழங்கலாம்.

**எச்4/10212/2018(மையம்)**

**தீர்மானம் எண்.402 (பொருள்– 20) : அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள். 21**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, 16 ஸ்ரீரங்கம் கோட்டம், வார்டு எண்.3 மற்றும் 4க்குட்பட்ட காந்தி ரோட்டில் அமைந்துள்ள இரயில்வே மேம்பாலம் (ROB) கீழ்புறத்தில் உள்ள பகுதி ஆணையர் அவர்களால் ஆய்வு செய்யப்பட்டது. அதுசமயம், அப்பகுதியில் மேற்படி பகுதி பொதுமக்கள் பயன்படுத்தும் வகையில் நடைபாதை, பூங்கா அமைத்தல் மற்றும் வர்ணம் பூசுதல் ஆகிய பணி மேற்கொண்டு அழகுபடுத்தி பூங்கா அமைக்கவும் தெரிவிக்கப்பட்டது.

எனவே, மேற்படி வார்டு எண்.3 மற்றும் 4க்குட்பட்ட காந்திரோடு இரயில்வே மேம்பாலம் (ROB) கீழ்புறத்தில் உள்ள பகுதியில் நடைபாதையுடன் கூடிய பூங்கா அமைக்கும் பணி மேற்கொள்ள ரூ.42.30 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்து தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் நிர்வாக அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு.**

1. மதிப்பீட்டுத் தொகை ரூ.42.30 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி அளிக்கலாம்.
2. **2018-19ம்** ஆண்டின் திருத்திய வரவு செலவுத்திட்டத்தில் **புதிய பூங்காக்கள் உருவாக்குதல் மற்றும் பழைய பூங்காக்களில் அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ளுதல் (3102)** என்ற தலைப்பின் கீழ் இப்பணிக்கான செலவினத்தை மேற்கொள்ள அனுமதி அளிக்கலாம்.

**இ2/9329/2018 (மையம்)**

**தீர்மானம் எண்.403 (பொருள்– 21) : அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள். 22**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, ஸ்ரீரங்கம், கோ.அபிஷேகபுரம் கோட்டத்திற்குட்பட்ட பகுதியில் கீழ்கண்ட பணிகளை திரு. ஏ. சுப்ரமணியன், திருச்சி அவர்களால் மேற்கொள்ளப் பட்டதற்கு இறுதிப்பட்டியல் வழங்கப்பட்டு விட்டது. மேற்படியார் இறந்து விட்டமையால் இவரது வாரிசுதாரரான திருமதி.ஆர்.அபிராமி, திருச்சி அவர்களின் விண்ணப்பத்தில் இப்பணிகளுக்கு பிடித்தம் செய்துள்ள வைப்புத் தொகை மற்றும் காப்புத் தொகையினை திரும்ப வழங்க கோரியுள்ளார். கீழ்கண்டுள்ள பணிகளை மேற்கொண்டமைக்கு தணிக்கையில் எவ்வித தணிக்கைத் தடையும் எழுப்பப்படவில்லை.

மேற்படி ஒப்பந்ததாரர் செலுத்தியுள்ள வைப்புத் தொகை இம்மாநகராட்சி காலங்கடந்த வைப்புத் தொகை மற்றும் காப்புத் தொகை பதிவேடுகளில் கீழ்கண்டவாறு பதிவு செய்யப்பட்டுள்ளது.

| வ எண் | பணியின் விபரம் | ஒப்பந்ததாரர் பெயர் (திரவாளர்கள்) | பட்டியலில் பிடித்தம் செய்யப் பட்ட நாள் | பிடித்தம் செய்யப்பட்ட தொகை (ரூபாயில்) | காலங்கடந்த வைப்புத் தொகை பதிவேட்டில் பக்க எண் & வரிசை எண் | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | | |
| | | | | | தொகுப்பு | ப. எண் | வ . எண் |
| 1 | வார்டு எண்10,11 பட்டர்வொர்த் சாலை, மலைக்கோட்டைமேல வீதி மற்றும் மீனாட்சி சுந்தரம் பிள்ளை தெருக்களில் தார்சாலை அமைக்கும் பணி **மதிப்பீடு ரூ.40.00 லட்சம்** இ3/11357/12 | திரு. ஏ. சுப்ரமணியன், திருச்சி (வாரிசுதாரர் திருமதி. ஆர். அபிராமி) | 15.04.13 | 116111.00 | VI | 5 | 35 |
| | வார்டு எண் 52, 53 அம்மையப் பிள்ளை நகர் பிரதான சாலை, சண்முகா நகர் மேற்கு விஸ்தரிப்பு பகுதிகளில் தார்சாலை அமைக்கும் பணி **மதிப்பீடு ரூ.46.00 லட்சம்** இ3/11327/12 | திரு.ஏ. சுப்ரமணியன், திருச்சி (வாரிசுதாரர் திருமதி.ஆர். அபிராமி) | 15.04.13 | 143746.00 | VI | 5 | 36 |
| **மொத்தம்** | | | | **259857.00** | | | |

எனவே, பட்டியலில் கண்டுள்ளவாறு இப்பணிகளுக்கு பட்டியலில் பிடித்தம் செய்துள்ள காப்புத் தொகை **ரூ.2,59,857/–**ஐ காலங்கடந்த வைப்புத் தொகை பதிவேட்டிலிருந்து ஒப்பந்ததாரர் திரு.ஏ.சுப்ரமணியன், திருச்சி அவர்கள் காலமானதால் மேற்படியாரின் வாரிசுதாரர் திருமதி. ஆர். அபிராமி, திருச்சி அவர்களுக்கு மேற்படி தொகைகளை திரும்ப வழங்கலாம் .

**அலுவலகக் குறிப்பு :**

மேற்கண்ட அட்டவணையில் கண்டுள்ள பணிகளுக்கு பிடித்தம் செய்துள்ள காப்புத் தொகை **ரூ.2,59,857/–**ஐ காலங்கடந்த வைப்புத் தொகை கணக்கிலிருந்து (Lapsed Deposit Account) திரும்ப வழங்கவும் ஒப்புதல் அளிக்கலாம்.

**இ3/7595/17(மையம்)**

**தீர்மானம் எண்.404 (பொருள்– 22) : அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள். 23**

ஆணையர் அவர்களின் அறிவுரையின் படி கஜா புயல் நிவாரண பணிகள் மேற்கொள்ள 20 எண்ணிக்கை தனியார் கனரக டிப்பர் வாகனங்களை வாடகை அடிப்படையில் அமர்த்திக்கொள்ள தெரிவிக்கப்பட்டது. அதன்படி கஜா புயல் நிவாரண பணி மேற்கொள்ள 16.11.2018 முதல் 05.12.2018 வரை 20 நாட்களுக்கு, மாவட்ட ஆட்சியர் தலைமையில் அமைக்கப்பட்ட வாகனங்களுக்கு வாடகை நிர்ணயம் செய்யப்படும் குழுவால் அங்கீகரிக்கப்பட்ட 2016–17ம் ஆண்டுக்கான வாடகை தொகை நிர்ணயம் செய்து வெளியிடப்பட்ட செயல்முறைகள் ந.க.எண்.83320/பி4/2016 நாள்.06.05.2016ன் படி 20 எண்ணிக்கை தனியார் டிப்பர் லாரிகள் தினசரி வாடகை அடிப்படையில் மண்டல போக்குவரத்து அலுவலர் மூலம் அமர்த்திக் கொள்ளலாம்.

மேற்கண்ட 20 எண்ணிக்கை தனியார் டிப்பர் வாகனங்களை கஜா புயல் நிவாரண பணிக்கு ஈடுபடுத்துவதால் கீழ்கண்ட விவரப்படியான உத்தேச செலவினத்தொகை ஏற்படும்.

**உத்தேச செலவினப்பட்டியல்**

| வ. எண் | உத்தேசமாக ஏற்படும் வாகன செலவு விவரம் | தொகை |
|---|---|---|
| 1. | 20 வாகனங்கள் (டிப்பர் லாரிகள்) ஓட்டுநர் படி மற்றும் எரிபொருள் உட்பட ( 16.11.2018 முதல் 05.12.2018 வரை ) 20 நாட்களுக்கு. | ரூ.17,00,000/– |

மேற்கண்ட விவரப்படி பொது மக்களின் நலன் கருதி போர்க்கால அடிப்படையில் கஜா புயல் நிவாரண பணிகள் மேற்கொள்ள 20 எண்ணிக்கைகள் தனியார் டிப்பர் வாகனங்களை 20 நாட்களுக்கு திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சியரகத்தின் மூலம் 2016–17ம் ஆண்டிற்கு நிர்ணயிக்கப்பட்ட வாகன வாடகை அடிப்படையில் வாடகைக்கு அமர்த்தி பணி மேற்கொள்ளவும் இதற்கான செலவினத் தொகை ரூ.17,00,000/–க்கு தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் அனுமதிக்கு பொருள் வைக்கப்பட்டுள்ளது.

**அலுவலகக் குறிப்பு :**

1. செலவினத் தொகை ரூ.17,00,000/–க்கு அனுமதி அளிக்கலம்.
2. 2018–19ம் ஆண்டு வரவு – செலவு திட்ட பொது நிதிக் கணக்குத் தலைப்பு எண் 2105/1ல் (திடக்கழிவு மேலாண்மை பராமரிப்புப் பணிகள் – மனித ஆற்றல் உட்பட) ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள தொகை ரூ.700.00 இலட்சத்திலிருந்து மேற்கண்ட செலவினத்தினை மேற்கொள்ளலாம்.

**(இ5/10691/2018/(மை)**

**தீர்மானம் எண்.405 (பொருள்– 23) : அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள். 24**

இம்மாநகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை பணிகள், குடிநீர் விநியோகம் , புதைவடிகால் பராமரிப்பு, மற்றும் தெருவிளக்குகள் பராமரிப்பு ஆகிய அத்தியாவசிய பணிகளின் முக்கியத்துவத்தை கருதியும், பொது மக்களின் நலன் கருதியும் மாநகராட்சியின் வாகனங்களை இயக்குவதற்கு, 34 எண்ணிக்கை ஓட்டுநர்களை Out Sourcing பணிக்கான நிபந்தனைகளின்படி, தினக்கூலி ஊதிய அடிப்படையில் 01.04.2018 முதல் 240 நாட்களுக்கு பணியினை மேற்கொள்ள, முதல் முறையாக 20.03.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் அனுமதி அவர்களின் அனுமதி நாள்:28.03.2018– ன் படி மாநகராட்சி வாகனங்களை இயக்குவதற்கு நாள் ஒன்றிற்கு நபர் ஒருவருக்கு ரூ.594/– வீதம் மனித ஆற்றல் வழங்குவதற்கு அனுமதி அளிக்கப்பட்டு மெசர்ஸ்.விஷன் கேர் சர்விசஸ்(பி) லிட், திருச்சி நிறுவனத்தாருக்கு உத்திரவு வழங்கப்பட்டு அதன்படி மனித ஆற்றல் சப்ளை செய்து வருகின்றனர். தற்பொழுது மேற்படி பணிக்காலம் 26.11.2018ல் முடிவடைய இருப்பதால், 27.11.2018 முதல் 125 நாட்களுக்கு ஒப்பந்த அடிப்படையில் 39 ஓட்டுநர்களை வழங்கும் பணிக்கு ரூ.31.40 லட்சம் மதிப்பீட்டில் தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் அனுமதி அவர்களின் அனுமதி பெறப்பட்டு ஒப்பந்தப்புள்ளி கோரி பணிகள் மேற்கொள்ள தனியாக கோப்பின் வாயிலாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இப்பணியின் அத்தியாவசியத்தைக் கருதி தற்போது ஓட்டுநர்கள் வழங்கும் பணியினை மேற்கொண்டுவரும் மெசர்ஸ்.விஷன் கேர் சர்விசஸ்(பி) லிட், திருச்சி நிறுவனத்தார் 12.11.2018ந் தேதிய கடிதத்தில் ஏற்கனவே வழங்கப்பட்டுள்ள விலை விகிதமான நாள் ஒன்றிற்கு நபர் ஒருவருக்கு ரூ.594/– என்ற அதே விலை அடிப்படையில் 34 ஓட்டுநர்களை வழங்க சம்மதம் தெரிவித்துள்ளதன்படி 27.11.2018 முதல் மாநகராட்சி வாகனங்களை இயக்குவதற்கு ஒப்பந்த அடிப்படையில் 34 ஓட்டுநர்களை வழங்கும் பணியினை ஒப்பந்தப்புள்ளி கோரி தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் அனுமதி பெற்று இறுதி செய்து ஒப்படைக்கும் வரை கால நீட்டிப்பு செய்து தொடர்ந்து பணி மேற்கொள்ள தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் ஒப்புதல் வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு.</u>

1) ஏற்கனவே வழங்கப்பட்டுள்ள ஆணையின் படி ஒப்பந்தகாலம் எதிர்வரும் 26.11.2018ல் முடிவடைய உள்ளதாலும் 27.11.2018 முதல் மாநகராட்சி வாகனங்களை இயக்குவதற்கு ஒப்பந்த அடிப்படையில் ஓட்டுநர்களை வழங்கும் பணியினை மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி கோரி ஆணையர் அவர்களின் ஒப்புதல் பெற்று இறுதி செய்து ஒப்படைக்கும் வரை மெசர்ஸ்.விஷன் கேர் சர்விசஸ்(பி) லிட், திருச்சி நிறுவனத்தாருக்கு பழைய விலை விகிதத்தின் படி நாள் ஒன்றிற்கு நபர் ஒருவருக்கு ரூ.594/– என்ற விலை விகித அடிப்படையில் கால நீட்டிப்பு செய்து ஒப்பந்த அடிப்படையில் 34 ஓட்டுநர்களை வழங்குவதற்கு பணி உத்திரவு வழங்க அனுமதி அளிக்கலாம்.
2) இப்பணிக்கான செலவினத்தை 2018–19ம் ஆண்டிற்கான வரவு செலவு திட்டமதிப்பீட்டில் (2090) தினக்கூலி பணியாளர்கள் ஊதியத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள தொகை ரூ.250.00 லட்சத்தில் மேற்கொள்ளவும் அனுமதி வழங்கலாம்.

**(இ5/935/2018(மையம்)**

**தீர்மானம் எண்.406 (பொருள்– 24) : அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள். 25**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, ஸ்ரீரங்கம் கோட்டம், வார்டு எண்.17க்குட்பட்ட ரெத்தினவேல் தேவர்ஹாலில் தூய்மை இந்தியா இயக்கத்தின் கீழ் மக்கள் கருத்துக்கணிப்பு விழிப்புணர்வு கூட்டரங்கு 17.01.2018 அன்று நடைபெற்றது. இந்த நிகழ்ச்சிக்கு தேவையான பவர்பாயின்ட், டேபிள் சேர், LCD புரோஜக்டர், மேடை அலங்காரப் பணிகள் வாடகை அடிப்படையில் மேற்படி பணிக்கு மதிப்பீடு ரூ.50,000/–க்கு தயாரிக்கப்பட்டு, மேற்படி பணியினை மதிப்பீட்டைக் காட்டிலும் –0.08% குறைவான விலை விகிதத்தில் M/S. ஸ்ரீ ஜெயம் & கோ, திருச்சி என்ற நிறுவனத்தார் மூலம் அவசர அவசியம் கருதி 1994 ஆம் ஆண்டு திருச்சிராப்பள்ளி மாநகராட்சி சட்டம் பிரிவு 15ன் கீழ் பணிகள் மேற்கொள்ளப்பட்டதை தனி அலுவலர் அவர்களின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:**

பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**கோப்பு எண். (இ1/2914/2018(ஸ்ரீ).**

**தீர்மானம் எண்.407 (பொருள்– 25) : பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.**

**பொருள். 26**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, கோ.அபிஷேகபுரம் கோட்டம், வார்டு எண்.40 மற்றும் 52க்குட்பட்ட பகுதிகளில் கீழ்கண்ட பணிகளை மேற்கொள்வதற்கு ஒப்பந்தப்புள்ளி அறிக்கை எண்.180/2018–19ன் வாயிலாக 25.09.2018 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்றுள்ள கீழ்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக்குழு பரிசீலித்து வழங்கியுள்ள பரிந்துரைகள் தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ எண் | வேலையின் விபரம் | வரப்பெற்றுள்ள ஒப்பந்தபுள்ளிகளின் விபரம் மற்றும் ஒப்பந்த சதவீதம் | குறிப்பு |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 1 | வார்டு எண். 40க்குட்பட்ட எடமலைப்பட்டிபுதூர் சித்தமருந்தகம் அருகில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தில் சுற்றுச்சுவர் அமைத்தல், சித்த மருத்துவமனைக்கு கழிப்பறை கட்டுதல், வர்ணம் பூசுதல், ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு வரும் நோயாளிகளுக்கு கழிப்பறை கட்டுதல், பணியாளர்களுக்கு கழிப்பறை கட்டுதல், மற்றும் ஆரம்ப சுகாதார நிலையத்தை சுற்றி பேவர் பிளாக் அமைக்கும் பணி மேற்கொள்ளுதல்.<br>மதிப்பீடு ரூ.22.00 இலட்சம்.<br>இ2/4034/2018 (மையம்) | 1. **திரு.எஸ்.துளசிதாஸ்,** 0.08 % குறைவு<br><br>2. திரு.சி.தனபால், 0.89 % கூடுதல் | வரப்பெற்ற இரு ஒப்பந்தப் புள்ளிகளில் **திரு.எஸ்.துளசிதாஸ், திருச்சி,** ஒப்பந்ததாரர் அவர்கள் மதிப்பீட்டைக் காட்டிலும் **0.08 சதவீதம் குறைவான** ஒப்பந்தப் புள்ளி கொடுத்துள்ளதை ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு பரிந்துரைத் துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம். |
| 2 | வார்டு எண்.52க்குட்பட்ட கீழவண்ணாரப்பேட்டை பகுதியில் மழைநீர் வடிகால் திரும்ப கட்டும் பணி மேற்கொள்ளுதல்.<br><br>மதிப்பீடு ரூ.22.00 இலட்சம்.<br>இ2/6519/2018 (மையம்) | 1. **திரு.எஸ்.சுரேஷ்,** 0.06 % குறைவு<br><br>2. திரு.எஸ்.சங்கர், 0.77 % கூடுதல் | வரப்பெற்ற இரு ஒப்பந்தப் புள்ளிகளில் **திரு.எஸ்.சுரேஷ், திருச்சி,** ஒப்பந்ததாரர் அவர்கள் மதிப்பீட்டைக் காட்டிலும் **0.06 சதவீதம் குறைவான** ஒப்பந்தப் புள்ளி கொடுத்துள்ளதை ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு பரிந்துரைத் துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம். |

**அலுவலகக்குறிப்பு.**

மேற்கண்ட அட்டவணையில் உள்ள பணிகளுக்கு பத்தி எண்.4ல் தெரிவிக்கப் பட்டுள்ள விவரப்படியான மதிப்பீட்டைக் காட்டிலும் குறைவான ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக்குழு பரிசீலித்து பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம்.

**(இ2/4034/2018(மையம்)**

**தீர்மானம் எண்.408 (பொருள்– 26) : அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள். 27**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி கோ–அபிஷேகபுரம் கோட்டம் வார்டு எண்.52க்குட்பட்ட இராமலிங்க நகர் மேற்கு விஸ்தரிப்பு பூங்கா இடத்தினை சுற்றி சுமார் 1000 குடியிருப்புகள் உள்ளது. மேலும், இப்பகுதியில் வாழும் இளைஞர்கள் மற்றும் பொது மக்கள் உடல் ஆரோக்கியத்தை கருத்தில் கொண்டு திறந்தவெளி உடற்பயிற்சி கூடம் மற்றும் நடைபாதை, கழிப்பிடம் மற்றும் தண்ணீர் வசதி அமைக்க வேண்டியது அவசியமாகிறது. எனவே பொதுமக்களின் நலன் கருதி மேற்குறிப்பிட்ட பணிகளை மேற்கொள்வதற்கு மதிப்பீடு ரூ.34.50 இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்டு நிர்வாக அனுமதி கோரி தனி அலுவலர் மற்றும் ஆணையர் பார்வைக்கும், அனுமதிக்கும் பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு.**

1. மேற்கண்ட பணிக்கான மதிப்பீட்டுத் தொகைக்கு நிர்வாக அனுமதி அளிக்கலாம்.
2. 2018–19ம் ஆண்டின் திருத்திய வரவு செலவுத்திட்டத்தில் புதிய பூங்காக்கள் உருவாக்குதல் மற்றும் பழைய பூங்காக்களில் அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ளுதல் (3102) என்ற தலைப்பின் கீழ் இப்பணிக்கான நிதியை ஒதுக்கீடு செய்து கொள்ள அனுமதி அளிக்கலாம்.

**இ2/10572/2018(மையம்)**

**தீர்மானம் எண்.409 (பொருள்– 27) : அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள். 28**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, கோ.அபிஷேகபுரம் கோட்டம், வார்டு எண்.46 மற்றும் 50க்குட்பட்ட பகுதியில் கீழ்கண்ட பணியை திரு.காஜாமலை விஜய், திருச்சி அவர்களால் மேற்கொள்ளப்பட்டதற்கு இறுதிப்பட்டியல் வழங்கப்பட்டு விட்டது. இப்பணிகளுக்கு பிடித்தம் செய்துள்ள வைப்புத் தொகை மற்றும் காப்புத் தொகையினை திரும்ப வழங்க கோரியுள்ளார். கீழ்கண்டுள்ள பணியினைமேற்கொண்டமைக்கு தணிக்கையில் எவ்வித தணிக்கைத் தடையும் எழுப்பப்படவில்லை.

மேற்படி ஒப்பந்ததாரர் செலுத்தியுள்ள வைப்புத் தொகை இம்மாநகராட்சி காலங்கடந்த வைப்புத் தொகை மற்றும் காப்புத் தொகை பதிவேடுகளில் கீழ்கண்டவாறு பதிவு செய்யப்பட்டுள்ளது.

| வ எண் | பணியின் விபரம் | ஒப்பந்ததாரர் பெயர் (திருவாளர்கள்) | பட்டியலில் பிடித்தம் செய்யப் பட்ட நாள் | பிடித்தம் செய்யப்பட்ட தொகை (ரூபாயில்) | காலங்கடந்த வைப்புத் தொகை பதிவேட்டில் பக்க எண் & வரிசை எண் | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | | |
| | | | | | தொகுப்பு | ப. எண் | வ . எண் |
| 1 | கோ.அபிஷேகபுரம் கோட்டம், வார்டு எண்.56க்குட்பட்ட லாசன்ஸ் சாலையையும் மற்றும் வார்டு எண்.50க்குட்பட்ட தென்னூர் அண்ணா நகரையும் இணைக்கும் இணைப்புச் சாலையில் போக்குவரத்தை பிரித்துக்காட்டும் வகையில் Kerb Casting இயந்திர உதவியுடன் சாலை மையத் தடுப்புச்சுவர் மற்றும் திட்டுக்கள் அமைக்கும் பணி மேற்கொள்ளல். **மதிப்பீடு ரூ.9.00 லட்சம்.** | திரு. காஜா மலை விஜய், திருச்சி. | 20.10.14 | 35,238 | 7 | 32 | 431 |
| **மொத்தம்** | | | | **35,238** | | | |

ஒப்பந்ததாரர் திரு. காஜாமலை விஜய், திருச்சி அவர்களிடம் பிடித்தம் செய்யப்பட்டுள்ள 4 சதவீத காப்புத் தொகை ரூ.35,238/—ஐ ஒப்பந்ததாரர் அவர்களுக்கு காலங்கடந்த வைப்புத் தொகை பதிவேட்டிலிருந்து திரும்ப வழங்க தனிஅலுவலர் அவர்களின் அனுமதிக்கு பொருள் வைக்கப் படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

மேற்கண்ட அட்டவணையில் கண்டுள்ள பணிகளுக்கு பிடித்தம் செய்துள்ள காப்புத் தொகை ரூ.35,238/—ஐ காலங்கடந்த வைப்புத் தொகை கணக்கிலிருந்து (Lapsed Deposit Account) திரும்ப வழங்கவும் ஒப்புதல் அளிக்கலாம்.

**இ2/11291/2013(மையம்)**

**தீர்மானம் எண்.410 (பொருள்— 28) : அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள். 29**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, பொன்மலைக் கோட்டம் வார்டுக்குட்பட்ட பகுதியில் கீழ்கண்ட பணியை திரு.காஜாமலை விஜய், திருச்சி அவர்களால் மேற்கொள்ளப்பட்டதற்கு இறுதிப்பட்டியல் வழங்கப்பட்டு விட்டது. இப்பணிகளுக்கு பிடித்தம் செய்துள்ள வைப்புத் தொகை மற்றும் காப்புத் தொகையினை திரும்ப வழங்க கோரியுள்ளார். கீழ்கண்டுள்ள பணியினை மேற்கொண்டமைக்கு தணிக்கையில் எவ்வித தணிக்கைத் தடையும் எழுப்பப் படவில்லை.

மேற்படி ஒப்பந்ததாரர் செலுத்தியுள்ள வைப்புத் தொகை இம்மாநகராட்சி காலங்கடந்த வைப்புத் தொகை மற்றும் காப்புத் தொகை பதிவேடுகளில் கீழ்கண்டவாறு பதிவு செய்யப்பட்டுள்ளது.

| வ எண் | பணியின் விபரம் | ஒப்பந்ததாரர் பெயர் (திருவாளர்கள்) | பட்டியலில் பிடித்தம் செய்யப் பட்ட நாள் | பிடித்தம் செய்யப்பட்ட தொகை (ரூபாயில்) | காலங்கடந்த வைப்புத் தொகை பதிவேட்டில் பக்க எண் & வரிசை எண் | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | | |
| | | | | | தொகுப்பு | ப. எண் | வ . எண் |
| 1 | பொன்மலைக் கோட்டம், வார்டுக்குட்பட்ட தென்னூர் அண்ணாநகர் இணைப்புச் சாலையின் கிழக்குப்பக்கம் பாரதிதாசன் சாலை முதல் கண்டோன்மென்ட் மின்வாரிய அலுவலகம் வரை மழைநீர் வடிகால் மற்றும் தாங்குச்சுவர் கட்டும் பணி மேற்கொள்ளல். **மதிப்பீடு ரூ.75.00 லட்சம்.** | திரு. காஜாமலை விஜய், திருச்சி. | 21.05.12 | 18,104 (1%) | 5 | 17 | 230 |
| | | | 25.04.13 | 72,920 (3%) | 5 | 6 | 53 |
| | | | 30.05.14 | 58,521 (3%) | 7 | 9 | 104 |
| | | | 05.11.15 | 43,757 (4%)22 **(நிலுவை வைப்பு தொகை)** | 1 | 52 | 50 |
| **மொத்தம்** | | | | **1,93,302** | | | |

ஒப்பந்ததாரர் திரு.காஜாமலை விஜய், திருச்சி அவர்களிடம் பிடித்தம் செய்யப்பட்டுள்ள காப்புத் தொகை ரூ.**1,93,302/–**ஐ காலங்கடந்த வைப்புத் தொகை பதிவேட்டிலிருந்து திரும்ப வழங்க தனிஅலுவலர் அவர்களின்அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

மேற்கண்ட அட்டவணையில் கண்டுள்ள பணிகளுக்கு பிடித்தம் செய்துள்ள காப்புத் தொகை ரூ.**1,93,302/–**ஐ காலங்கடந்த வைப்புத் தொகை கணக்கிலிருந்து (Lapsed Deposit Account) திரும்ப வழங்கவும் ஒப்புதல் அளிக்கலாம்.

**இ2/7787/2009(மையம்)**

**தீர்மானம் எண்.411 (பொருள்– 29) : அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**(ஒப்பம்) – ந. இரவிச்சந்திரன்,**
**தனிஅலுவலர் மற்றும் ஆணையர்,**
**திருச்சிராப்பள்ளி மாநகராட்சி.**